**டிசம்பர் – 31**

# TNPSC துளிகள்

- ஜம்மு காஷ்மீரின் கிஷ்த்வார் மாவட்டத்தில் 260 மெகாவாட் திறன் கொண்ட துல்ஹஸ்தி இரண்டாம் நிலை நீர்மின் நிலையத்திற்கு சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் நிபுணர் மதிப்பீட்டுக் குழு ஒப்புதல் அளித்துள்ளது.
- கோயம்புத்தூரில் உள்ள உக்கடம்-ஆத்துப்பாலம் மேம்பாலம் ஆனது பாரத ரத்னா விருது பெற்ற முன்னாள் மத்திய அமைச்சர் C. சுப்பிரமணியத்தின் பசுமைப் புரட்சி மரபைக் கௌரவிக்கும் வகையில் அவரது பெயரால் பெயரிடப்படும் என்று தமிழக முதல்வர் அறிவித்துள்ளார்.
- பண்டிட் மதன் மோகன் மாளவியாவின் சேகரிக்கப்பட்ட படைப்புகள் மற்றும் உரைகளின் இறுதிக் கட்ட 12 தொகுதித் தொடரான மகாமனா வாங்மாயை இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் புது டெல்லியில் வெளியிட்டார்.
- அரிஸ்டா நெட்வொர்க்ஸ் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி ஜெயஸ்ரீ உல்லால், ஹுருன் இந்தியா இதழின் 2025 ஆம் ஆண்டின் பணக்காரர்கள் பட்டியலில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த உலகின் பணக்காரத் தொழில்முறை மேலாளராக தர வரிசைப் படுத்தப்பட்டுள்ளார்.
- முதன்முறையாக அசாமின் ககோய் காப்பு வனப்பகுதியில் ஒரு படைச் சிறுத்தை தென்பட்டது.
  - இது IUCN அமைப்பின் செந்நிறப் பட்டியலில் எளிதில் பாதிக்கப்படக்கூடிய இனமாக வகைப்படுத்தப்பட்டுள்ளது என்பதோடு 1972 ஆம் ஆண்டு இந்தியாவின் வனவிலங்கு (பாதுகாப்பு) சட்டத்தின் முதல் அட்டவணையின் கீழ் இது பாதுகாக்கப் படுகிறது.
- மணிப்பூரின் சேனாபதி மாவட்டத்தைச் சேர்ந்த சோகோன் கிரிச்சேனா, 'மணிப்பூரின் மலர் பெண்மணி' என்று அழைக்கப்படுகிறார் என்பதோடு மேலும் அவர் பாரம்பரிய வேளாண் அறிவை நவீன வணிக நடைமுறைகளுடன் கலப்பதன் மூலம் மலர் வளர்ப்பை ஊக்குவிக்கிறார்.
  - வடகிழக்கு இந்தியாவில் பெண்களின் தலைமை, சுயசார்பு மற்றும் பொருளாதார அதிகாரமளித்தல் ஆகியவற்றில் அவர் ஆற்றியப் பணிகளுக்காக மன் கி பாத் நிகழ்ச்சியில் பிரதமரால் தேசிய அளவில் அவர் அங்கீகரிக்கப்பட்டார்.


# தமிழ்நாட்டுச் செய்திகள்

## CMCHIS திட்டத்திற்கான நிதி

- தமிழ்நாடு அரசானது அதன் மாநில சுகாதாரக் காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் உயர்நிலை மருத்துவ நடைமுறைகளுக்கான அணுகலைக் கணிசமாக மேம்படுத்தி உள்ளது.
- முதலமைச்சரின் விரிவான சுகாதாரக் காப்பீட்டுத் திட்டத்தின் (CMCHIS) கீழ் 18,000க்கும் மேற்பட்ட நோயாளிகள் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகள் போன்ற உயர்நிலை நடைமுறைகளை மேற்கொண்டுள்ளனர்.
- 2012 ஆம் ஆண்டு ஜனவரி 11 முதல் 2025 ஆம் ஆண்டு நவம்பர் 30 ஆம் தேதி வரை மொத்தம் 18,182 பேர் இதன் மூலம் பயனடைந்துள்ளனர்.
- இந்தத் திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட மொத்தத் தொகை 1,556.35 கோடி ரூபாய்

ஆகும்.

- ❖ சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைகள் அதிக எண்ணிக்கையிலான பயனாளிகள் பயன் பெற்றனர் (6,524) என்ற நிலையில் அதைத் தொடர்ந்து காக்லியர் உள்வைப்புகள் (6,276) தொடர்பான சிகிச்சைகள் உள்ளன.
- ❖ செலவிடப்பட்ட தொகையின் அடிப்படையில், கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சைக்கு அதிகச் செலவினம் ஏற்பட்டது (515.83 கோடி ரூபாய்).
- ❖ CMCHIS திட்டத்தின் கீழ், கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சைக்கு 22,00,000 ரூபாய் ஒதுக்கப் பட்டுள்ளது.


oritising health

Chief Minister's Comprehensive Health Insurance Scheme (CMCHIS) in Tamil Nadu has improved access to high-end procedur
ding organ transplants. Eight high-end procedures are covered under the scheme

OK AT THE PROCEDURES
THEIR COST

enal transplant: ₹4,00,000
ver transplantation: ₹22,00,000
eart transplantation: ₹15,00,000
eart and lung transplantation: ₹20,00,000
ung transplantation: ₹15,00,000 nd ₹20,00,000 (Single and Double)
ochlear implantation: ₹6,39,000
uditory brainstem implantation: ₹18,24,120
one marrow transplantation nd stem cell transplantation: ₹3,00,000 to ₹17,00,000 [depending upon type]

HIGH-END PROCEDURES UNDER CMCHIS FROM JANUARY 11, 2012 TO NOVEMBER 30, 2025

| Procedure | Number of patients approved | Amoun approve [₹ in cror |
|---|---|---|
| Cochlear implant | 6,276 | 437.7 |
| Renal transplant | 6,524 | 257.7 |
| Liver transplant | 2,366 | 515.8 |
| Bone marrow transplant | 2,625 | 274.5 |
| Heart transplant | 247 | 41.77 |
| Heart and lung transplant | 37 | 8.8 |
| Double lung transplant | 50 | 10.6 |
| Auditory brainstem implantation | 57 | 9.3 |
| TOTAL | 18,182 | 1,556.3 |

Source: Chief Minister's Comprehensive Health Insurance S


## விஜயநகர சகாப்த தங்க நாணயங்கள்



- ❖ திருப்பத்தூர் மாவட்டத்தில் உள்ள ஜோலார்பேட்டை அருகே விஜயநகர காலத்தைச் சேர்ந்த எண்பத்தி ஆறு முத்திரையிடப்பட்ட தங்க நாணயங்கள் கண்டெடுக்கப் பட்டன.
- ❖ வேளாண் நிலத்தின் மேற்பரப்பிற்குக் கீழே புதைக்கப்பட்ட இரும்புப் பானைக்குள் இந்த தங்க நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டன.
- ❖ இந்த நாணயங்களில் விஜயநகர ஆட்சியாளர்களால் பொதுவாகப் பயன்படுத்தப்பட்ட பன்றி சின்னம் உள்ளது.

- 1878 ஆம் ஆண்டு இந்தியப் புதையல் சட்டத்தின் படி, மீட்கப்பட்ட புதையல் சட்டப் பூர்வமாக அரசாங்கத்திற்குச் சொந்தமானது.

## மஞ்சள் ஏற்றுமதி




- உலகளாவிய தேவை அதிகரித்து வருவதால் தமிழ்நாட்டின் ஈரோடு மாவட்டத்தில் இருந்து மஞ்சள் ஏற்றுமதி இந்த ஆண்டு 5% அதிகரித்துள்ளது.
- ஈரோடு மஞ்சள் அதிக குர்குமின் உள்ளடக்கத்திற்கு (2.5%–3.9%) பெயர் பெற்றது மற்றும் புவிசார் குறியீட்டினைக் கொண்டுள்ளது.
- இந்தப் பயிர் ஜூன்-ஜூலை ஆகிய மாதங்களில் விதைக்கப்பட்டு பிப்ரவரி-மார்ச் ஆகிய மாதங்களில் அறுவடை செய்யப்படுகிறது.
- தெலுங்கானாவின் நிஜாமாபாத்திற்குப் பிறகு இந்தியாவில் இரண்டாவது பெரிய மஞ்சள் சந்தையை ஈரோடு கொண்டுள்ளது.
- இந்த மாவட்டம் ஜெர்மனி, ஈரான், ஈராக், மொராக்கோ, மலேசியா, சவுதி அரேபியா, பிரேசில், நெதர்லாந்து மற்றும் வங்காளதேசம் போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறது.
- ஈரோட்டில் மஞ்சள் சாகுபடி தமிழ்நாட்டின் 1.60 லட்சம் ஏக்கரில் பயிரிடப்படும் மசாலாப் பொருட்கள் சாகுபடியில் 30 சதவீதத்திற்கும் மேற்பட்டப் பரப்பில் பயிரிடப் படுகிறது என்ற நிலையில் இதன் மூலம் ஆண்டுதோறும் இரண்டு லட்சத்திற்கும் அதிகமான பைகளை உற்பத்தி செய்கிறது.


# தேசியச் செய்திகள்

## NATGRID–NPR இணைப்பு

- இந்திய அரசாங்கம் ஆனது தேசியப் புலனாய்வுக் கட்டமைப்பினை (NATGRID) தேசிய மக்கள்தொகை பதிவேடுடன் (NPR) ஒருங்கிணைத்துள்ளது.
- இந்த ஒருங்கிணைப்பானது, சரிபார்க்கப்பட்ட மக்கள்தொகை மற்றும் குடும்பத்துடன் தொடர்புடைய தரவுகளுக்கான நிகழ்நேர அணுகலை அனுமதிக்கிறது.
- 26/11 மும்பை தீவிரவாதத் தாக்குதலுக்குப் பிறகு (2008 ஆம் ஆண்டு) உளவுத்துறை ஒருங்கிணைப்பை மேம்படுத்த NATGRID உருவாக்கப்பட்டது.
- உள்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படுகின்ற இது 20க்கும் மேற்பட்ட வகை

குடிமையியல் மற்றும் வணிகத் தரவுத் தளங்களை ஒருங்கிணைக்கிறது.

- NATGRID அமைப்பின் பகுப்பாய்வுக் கருவியான காண்டிவா, முக அங்கீகாரத்தை மேற் கொள்கிறது என்ற நிலையில் இது மேலும் சந்தேகத்திற்குறிய நபர்களை அடையாளம் காண வேறுபட்ட தரவுப் புள்ளிகளை ஒருங்கிணைக்கிறது.
- இந்த ஒருங்கிணைப்பு என்பது தீவிரவாத எதிர்ப்பு முயற்சிகளை மேம்படுத்துவதோடு, இந்தியா முழுவதும் குற்ற விசாரணைகளைத் துரிதப்படுத்துகிறது.




## வெடிகுண்டு அகற்றும் அமைப்புகள்




- இந்தியத் தரநிலைகள் வாரியம் (BIS) ஆனது, வெடிகுண்டு அகற்றும் அமைப்புகளுக்கான இந்தியாவின் முதல் தேசியத் தரநிலையை அறிவித்துள்ளது.
- புதிதாக அறிவிக்கப்பட்ட இந்தத் தரநிலை IS 19445:2025 என்று பெயரிடப்பட்டுள்ளது.
- மத்திய உள்துறை அமைச்சகம் (MHA) மற்றும் டெர்மினல் பாலிஸ்டிக் ஆராய்ச்சி ஆய்வகம் (TBRL) ஆகியவற்றின் வேண்டுகோளின் பேரில் இந்தத் தரநிலை உருவாக்கப் பட்டது.
- வெடிமருந்துகள் மற்றும் பிளவு விளைவுகளில் வெடிகுண்டு அகற்றும் அமைப்புகளைப் பரிசோதிக்க இது தெளிவான வழிகாட்டுதல்களை வகுக்கிறது.
- கொள்முதல் நிறுவனங்கள், உற்பத்தியாளர்கள் மற்றும் சோதனை அமைப்புகளால்

தன்னார்வ அடிப்படையில் ஏற்றுக் கொள்ளப் படுவதற்காக இந்தத் தரநிலை வடிவமைக்கப் பட்டுள்ளது.

- இந்தியாவில் சீரான சோதனை நடைமுறைகளைக் கொண்டு வருவதையும் வெடிகுண்டு அகற்றும் நடவடிக்கைகளின் பாதுகாப்பை மேம்படுத்துவதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

## ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் விரிவாக்கம்

**What is Ayushman Bharat?**

Ayushman Bharat Pradhan Mantri Jan Arogya Yojana (AB PM-JAY) is a scheme to provide health cover or health insurance of up to Rs 5 lakh per family per year.

**Who is eligible?**

PM-JAY has been rolled out for the bottom 40% of the poor and vulnerable population, targeting approximately 12 crore households. The inclusion of households is based on the criteria mentioned in the Socio-Economic Caste Census 2011 for rural and urban areas.

**How are claims checked/ verified?**


Typically, the patient or one of her relatives approaches the Ayushman Bharat Counter, where the patient's identity is verified. The information provided by the treating doctor is fed into an online portal and sent to State Health Authorities (SHA) for approval. The completed indent form is dispatched to Amrit Pharmacy, which offers free treatment/implants at no cost to the patient.

- ஒடிசா மற்றும் டெல்லி ஆயுஷ்மான் பாரத் - பிரதான் மந்திரி ஜன் ஆரோக்ய யோஜனா (AB-PMJAY) திட்டத்தில் இணைந்துள்ளதுடன் பெரும்பாலான இந்திய மாநிலங்கள் இந்தத் திட்டத்தின் கீழ் சேர்ந்துள்ளன.
- 2018 ஆம் ஆண்டு முதல், 42.48 கோடி ஆயுஷ்மான் அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன, 10.98 கோடி மருத்துவமனை சேர்க்கைகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன மற்றும் 1.60 லட்சம் கோடி ரூபாய் மதிப்புள்ள கோரிக்கைகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.
- ஆயுஷ்மான் பாரத் டிஜிட்டல் திட்டம் (ABDM) 84.35 கோடி ABHA (ஆயுஷ்மான் பாரத் சுகாதாரக் கணக்கு) கணக்குகளை உருவாக்கி 80.66 கோடி சுகாதாரப் பதிவுகளை இணைத்து, டிஜிட்டல் சுகாதாரப் பதிவு பகிர்வை செயல்படுத்துகிறது.
- 94.19 லட்சம் முதியோர்கள் பதிவு செய்துள்ள ஆயுஷ்மான் வய வந்தனா 70 வயதுக்கு மேற்பட்ட குடிமக்களுக்கு ஆண்டிற்கு 5 லட்சம் ரூபாய் வரையில் இலவச சிகிச்சையை வழங்குகிறது.
- AIIMS டெல்லி, PGIMER சண்டிகர் மற்றும் AIIMS ரிஷிகேஷ் ஆகியவற்றில் செயற்கை நுண்ணறிவு மூலம் இயக்கப்படும் சுகாதாரச் சீர்திருத்தங்கள் அறிமுகப் படுத்தப் பட்டன, இதில் நோய் கண்காணிப்பு, காசநோய் கண்டறிதல் மற்றும் மருத்துவ முடிவு ஆதரவுக்கான செயற்கை நுண்ணறிவு கருவிகள் அடங்கும்.


## REPM திட்டம்

- அதிக மதிப்புள்ள காந்தங்களுக்கான நாட்டின் முதல் ஒருங்கிணைந்த உள்நாட்டு உற்பத்திச் சூழல் அமைப்பை உருவாக்க, இந்தியா REPM (உருக்கி இணைக்கப்பட்ட அருமண் நிரந்தர காந்தங்களின் உற்பத்தியை ஊக்குவிக்கும் திட்டம்) திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்தத் திட்டம் இறக்குமதிச் சார்புநிலையைக் குறைத்து மின்சார வாகனங்கள் (EV), புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, மின்னணுவியல், விண்வெளி மற்றும் பாதுகாப்பு போன்ற உத்தி சார் துறைகளை ஆதரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- இந்தத் திட்டத்திற்கான அங்கீகரிக்கப்பட்ட செலவினம் சுமார் 7,000 கோடி ரூபாய்க்கும் அதிகமாகும் என்ற நிலையில் மேலும் இது ஆண்டிற்கு 6,000 மெட்ரிக் டன் காந்த உற்பத்தியை இலக்காகக் கொண்டுள்ளது.
- காந்தங்களுக்குத் தேவையான அருமண் தாதுக்கள் ஒடிசா, தமிழ்நாடு, கேரளா, ஆந்திரப் பிரதேசம், மேற்கு வங்காளம், குஜராத், ஜார்க்கண்ட் மற்றும் மகாராஷ்டிரா உள்ளிட்ட இந்திய மாநிலங்களில் காணப்படுகின்றன.
- இதற்கான மூலப்பொருட்களைப் பெறுவதற்காக ஆஸ்திரேலியா, அர்ஜென்டினா மற்றும் சாம்பியா போன்ற நாடுகளுடன் அரசாங்கம் சில சர்வதேச ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டது.
- REPM திட்டம் இந்தியாவின் உள்நாட்டுத் தொழில்துறை திறனை வலுப்படுத்துவதோடு, தூய்மையான எரிசக்தி மாற்றத்தை ஆதரிக்கிறது.




## பிளாசரின் விரைவு தட மாற்ற அமைப்பு




- வடகிழக்கு எல்லைப்புற இரயில்வே நிர்வாகத்தின் (NFR) அலிப்பூர்துவார் பிரிவு, பிளாசரின் விரைவு தடா மாற்ற அமைப்பை (PQRS) பயன்படுத்தி 1,033 பாதை மீட்டர்கள் என்ற ஒற்றை நாளிலேயே இயந்திரமயமாக்கப்பட்ட அதிக தூரப் பாதைப் புதுப்பித்தல் நடவடிக்கையை அடைந்தது.
- சுயமாக இயக்கப்படும் பாரந்தூக்கிகளை உள்ளடக்கிய PQRS அமைப்பு இரயில்

தடங்களை விரைவாக மாற்ற அனுமதித்து, பராமரிப்புச் செலவுகள் மற்றும் கூடுதல் சரக்குப் போக்குவரத்தின் தேவையைக் குறைக்கிறது.

- NFR ஆனது அதன் அதிகார வரம்பில் மொத்தம் 290.8 கிமீ பாதையை புதுப்பித்து வருகிறது என்ற ஒரு நிலையில் இதில் கதிஹார், அலிப்பூர்துவார் (மேற்கு வங்காளம்), ரங்கியா, லும்டிங் மற்றும் டின்சுகியா ஆகிய பிரிவுகள் அடங்கும்.
- NFR ஆனது வடகிழக்கு மாநிலங்கள், மேற்கு வங்காளத்தின் ஏழு மாவட்டங்கள் மற்றும் வடக்கு பீகாரின் ஐந்து மாவட்டங்களில் செயல்பாட்டு எல்லையைக் கொண்டுள்ளது என்ற நிலையில் இதன் தலைமையகமானது அசாம் கௌஹாத்தியின் மாலிகௌனில் உள்ளது.

## CAPF படைகளில் முன்னாள் அக்னிவீரர்கள்





- மத்திய ஆயுதக் காவல் படைகளின் (CAPF) C தரப் பதவிகளில் முன்னாள் அக்னி வீரர்களுக்கான இட ஒதுக்கீட்டை மத்திய உள்துறை அமைச்சகம் 10 சதவீதத்திலிருந்து 50% ஆக உயர்த்தியுள்ளது.
- எல்லைப் பாதுகாப்புப் படையில் (BSF) காலியாக உள்ள காவலர் பதவிகளில் 50% ஆனது தற்போது முன்னாள் அக்னிவீரர்களுக்கு ஒதுக்கப்படும்.
- முன்னாள் அக்னிவீரர்களுக்கு உடல் தரத் தகுதித் தேர்வு (PST) மற்றும் உடல் திறன் தேர்வு (PET) ஆகியவற்றிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது ஆனால் அவர்கள் எழுத்துத் தேர்வுகளை எழுத வேண்டும்.
- மத்தியத் தொழில்துறைப் பாதுகாப்புப் படை (CISF), எல்லைப் பாதுகாப்புப் படை (BSF),

மத்திய சேமக் காவல் படை (CRPF), இந்தோ-திபெத்திய எல்லைக் காவல் படை (ITBP), சஷாஸ்திர சீமா பால் (SSB) மற்றும் அசாம் ரைபிள்ஸ் உள்ளிட்ட அனைத்து CAPF படைகளுக்கான ஆட்சேர்ப்பு விதிகள் படிப்படியாகத் திருத்தப்படும்.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## புல்வாய்களின் எண்ணிக்கை




- 2022–2023 ஆம் ஆண்டில் 260 ஆக இருந்த தமிழ்நாட்டின் வல்லநாடு சரணாலயத்தில் உள்ள புல்வாய்களின் (ஆன்டிலோப் செர்விகாப்ரா) எண்ணிக்கை, 2023–2024 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பில் 300 ஆக அதிகரித்துள்ளது.
- 1987 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட வல்லநாடு சரணாலயம், சுமார் 1,641 ஹெக்டேர் பரப்பளவைக் கொண்டுள்ளது என்ற நிலையில் இது 1972 ஆம் ஆண்டு வனவிலங்குப் பாதுகாப்புச் சட்டத்தின் முதல் அட்டவணையில் பட்டியலிடப்பட்டுள்ள அருகி வரும் புல்வாய்களுக்கான இயற்கை வாழ்விடமாகும்.
- தமிழ்நாடு பல்லுயிர் வளங்காப்பின் கீழான புல்வெளி மீளுருவாக்கம் மற்றும் பருவ நிலை மாற்ற எதிர் நடவடிக்கைகளுக்கான பசுமையாக்கத் திட்டத்தின் (TBGPCCR) கீழ் சுமார் 50 ஹெக்டேர் பரப்பிலான பூர்வீக புல் இனங்களை மீளுருவாக்கியுள்ளது என்ற நிலையில் இது புல்வாய்களின் வாழ்விட நிலைமைகளை மேம்படுத்துகிறது.
- இந்தச் சரணாலயத்தில் 300 புள்ளி மான்கள், 150 சம்பார் மான்கள் உள்ளன.
- புல்வாய் (ஆன்டிலோப் செர்விகாப்ரா) IUCN அமைப்பின் செந்நிறப் பட்டியலால் உலக அளவில் தீவாய்ப்புக் கவலை குறைந்த இனமாகப் பட்டியலிடப்பட்டுள்ளது.
- இது தூத்துக்குடி மாவட்டம் ஸ்ரீவைகுண்டம் தாலுகாவின் வல்லநாடு கிராமத்தில் உள்ள ஒரு தனிமைப்படுத்தப்பட்ட மலையில் அமைந்துள்ளது.
- இது இந்தியாவின் தெற்கே உள்ள இடமாகும் என்ற நிலையில் அங்கு இயற்கையாகவே புல்வாய் மான்கள் வசிக்கின்றன.

## 2025 ஆம் ஆண்டில் உலகளாவிய பருவநிலைப் பேரழிவுகள்

- 2025 ஆம் ஆண்டில், காட்டுத்தீ, வெள்ளம், புயல்கள், வெப்ப அலைகள் மற்றும் வறட்சி ஆகியவை உலகளவில் 120 பில்லியன் டாலருக்கும் அதிகமான பொருளாதார இழப்பை ஏற்படுத்தின.
- சுமார் 60 பில்லியன் டாலருக்கும் அதிகமான சேதத்தையும் 400க்கும் மேற்பட்ட


உயிரிழப்புகளையும் ஏற்படுத்திய கலிபோர்னியா காட்டுத்தீ அதிக செலவினத்தினை ஏற்படுத்திய ஒரு ஒற்றைப் பேரழிவாகும்.

- தென்கிழக்கு ஆசியாவில் ஏற்பட்ட புயல் மற்றும் வெள்ளம் சுமார் 25 பில்லியன் டாலருக்கும் அதிகமான சேதத்தையும் 1,750க்கும் மேற்பட்ட உயிரிழப்புகளையும் ஏற்படுத்தியது.
- சீனா, இந்தியா மற்றும் பாகிஸ்தானில் ஏற்பட்ட வெள்ளம் மில்லியன் கணக்கான மக்களைப் பாதித்தது என்பதோடு இந்தியா மற்றும் பாகிஸ்தானில் 6 பில்லியன் டாலருக்கும் அதிகமான சேதங்களை ஏற்படுத்தியதோடு அது 1,860க்கும் மேற்பட்ட உயிரிழப்புகளையும் எட்டியது.
- 2025 ஆம் ஆண்டில் ஆசிய நாடுகள் முதல் ஆறு அதிக செலவினம் மிக்க பேரழிவுகளில் நான்கை எதிர் கொண்டன.




# மாநிலச் செய்திகள்

## e-ஸ்வஸ்த்ய சாம்வாத் தளம்




- இராஜஸ்தான் அரசாங்கம் ஆனது மருத்துவக் கல்வியில் ஆளுகை, வெளிப்படைத்

தன்மை மற்றும் ஒருங்கிணைப்பை மேம்படுத்துவதற்கான ஒரு டிஜிட்டல் தளமான "e-ஸ்வஸ்த்ய சம்வாத்" தளத்தினைத் தொடங்கியது.

- இந்தத் தளம் ஆனது விரைவாக முடிவெடுப்பதற்காக கொள்கை வகுப்பாளர்கள், மருத்துவ நிறுவனங்கள், ஆசிரியர்கள், மருத்துவர்கள், செவிலிய ஊழியர்கள், மாணாக்கர்கள் மற்றும் பொதுமக்களை இணைக்கிறது.
- இந்தக் கூட்டங்கள் ஆனது, வாரத்திற்கு இரண்டு முறை காணொளிக் காட்சிகள் மூலம் முதலில் மூத்த நிலை அதிகாரிகள், பின்னர் திறந்த நிலைத் தொடர்பு என இரண்டு கட்டங்களாக நடத்தப்படுகின்றன.
- சுகாதாரத் திட்டங்கள், உள்கட்டமைப்பு, நிதி ஒதுக்கீடு, முதலமைச்சர் அலுவலக உத்தரவுகள், CMIS மற்றும் CP-கிராம்கள் மூலம் குறை தீர்க்கும் நடவடிக்கைகள் மற்றும் செயல்பாட்டுச் சிக்கல்கள் ஆகியவை இதன் விவாதங்களில் அடங்கும்.
- இராஜஸ்தான் மருத்துவக் கல்வி முறை முழுவதும் பொறுப்புணர்வை வலுப்படுத்தும் வகையில் 72 மணி நேரத்திற்குள் நடவடிக்கை எடுக்கப்பட்டது குறித்த அறிக்கைகள் கோரப் படுகின்றன.

## ‘Green to Gold’ முன்னெடுப்பு





- கிராமப்புறப் பொருளாதாரத்தையும் நிலையான மேம்பாட்டினையும் மேம்படுத்துவதற்காக ‘Green to Gold’ முன்னெடுப்பின் கீழ் இமாச்சலப் பிரதேசம் ஒழுங்குபடுத்தப்பட்ட தொழில்துறை கஞ்சா பயிர் சாகுபடியைத் தொடங்கியுள்ளது.
- இந்த முன்னெடுப்பு என்பது 2027 ஆம் ஆண்டிற்குள் தன்னிறைவு பெற்ற இமாச்சலப் பிரதேசத்தை உருவாக்குவதையும், இந்தியாவின் உயிரிப் பொருளாதாரத்தில் அந்த மாநிலத்தை முன்னணியில் நிலை நிறுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இதன் டெட்ராஹைட்ரோகன்னாபினோல் (THC) உள்ளடக்கம் 0.3% ஆகக் குறைக்கப் பட்டு, இது அதனைப் போதைப்பொருள் அல்லாததாகவும், போதைப்பொருள் துஷ்பிரயோகத்திற்குப் பொருத்தமற்றதாகவும் ஆக்குகிறது.
- கஞ்சா பயன்பாடுகளில் ஜவுளி, உயிரி நெகிழிகள், மருத்துவம், அழகுசாதனப் பொருட்கள், உயிரி எரிபொருள் மற்றும் குறைந்த கார்பன், சுற்றுச்சூழலுக்கு உகந்த கட்டுமானப் பொருளான கஞ்சா கிரீட் ஆகியவை அடங்கும்.

- கஞ்சா செடி பருவநிலைக்கு தகவமைப்புத் திறன் கொண்டது என்பதோடு மேலும் அதன் சாகுபடிக்குப் பருத்தியை விட 50% குறைவான நீர் தேவைப்படுகிறது என்ற நிலையில் மேலும் சிறிய அளவிலான மற்றும் தரமிழந்த மண்ணில் நன்றாக வளரும் இது இமாச்சலத்தின் மலைப் பகுதிகளுக்கு ஏற்றதாக அமைகிறது.
- இந்த முன்னெடுப்பு ஆண்டுதோறும் 1000 முதல் 2000 கோடி ரூபாய் வரை வருவாய் ஈட்டும் என்றும், விவசாயிகள், புத்தொழில் நிறுவனங்கள் மற்றும் கிராமப்புற இளையோர்களுக்கு வாழ்வாதாரத்தை உருவாக்கும் என்றும், இது இறக்குமதியைச் சார்ந்திருப்பதைக் குறைக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

# இதரச் செய்திகள்

## காஷ்மீரில் 2,000 ஆண்டுகள் பழமையான புத்த மதத் தளம்





- ஜம்மு காஷ்மீரின் பாரமுல்லா மாவட்டத்தில் உள்ள ஜெஹான்போரா கிராமத்தில் 2,000 ஆண்டுகள் பழமையான புத்த மதத் தளத்தை தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- குஷான் காலத்தைச் சேர்ந்த ஸ்தூபிகள், மடாலயக் கட்டிடங்கள் மற்றும் எஞ்சிய கட்டமைப்புப் பகுதிகள் இந்த அகழ்வாராய்ச்சிகளில் கண்டறியப்பட்டுள்ளன என்ற நிலையில் அவை ஒழுங்கமைக்கப் பட்ட புத்த மத நடவடிக்கைகளைக் காட்டுகின்றன.
- குஷான் தலைநகர் ஹுவிஷ்கபுராவுடன் இணைக்கப்பட்ட ஒரு முக்கியமான புத்த மையமாக ஜெஹான்போரா இருந்திருக்கலாம்.
- இதன் கட்டிடக் கலை அம்சங்கள் காஷ்மீர் மற்றும் வடமேற்குப் புத்த சமயப் பகுதிகளுக்கு இடையிலான கலாச்சார மற்றும் மதத் தொடர்புகளைக் குறிக்கின்ற காந்தார அமைப்புகளை ஒத்திருக்கின்றன.

- இந்தக் கிராமம் ஆனது, துறவிகள், வர்த்தகர்கள் மற்றும் கருத்துக்களின் இயக்கத்திற்கு உதவுகின்ற, காந்தாரத்தை காஷ்மீருடன் இணைக்கும் ஒரு பழங்கால வர்த்தக மற்றும் யாத்திரை நடைபாதையில் அமைந்துள்ளது.

## இந்திய தேசிய காங்கிரசின் 140வது ஸ்தாபன தினம்

- இந்தியத் தேசிய காங்கிரஸ் (INC) அதன் 140வது ஸ்தாபன தினத்தை 2025 ஆம் ஆண்டு டிசம்பர் 28 ஆம் தேதியன்று கொண்டாடியது.
- INC ஆனது 1885 ஆம் ஆண்டு டிசம்பர் 28 ஆம் தேதியன்று ஆலன் ஆக்டேவியன் ஹியூம், இந்தியத் தலைவர்கள் தாதாபாய் நௌரோஜி, சுரேந்திரநாத் பானர்ஜி, பெரோஸ்ஷா மேத்தா மற்றும் கோபால கிருஷ்ண கோகலே ஆகியோரால் நிறுவப்பட்டது.
- இதன் முதல் அமர்வு பம்பாயில் (மும்பை) உள்ள கோகுல்தாஸ் தேஜ்பால் சமஸ்கிருதக் கல்லூரியில் நடைபெற்றது, மேலும் W. C. பொன்னர்ஜி அதன் முதல் தலைவராக இருந்தார்.
- ஒத்துழையாமை, சட்ட மறுப்பு, வெள்ளையனே வெளியேறு, மற்றும் பூர்ண ஸ்வராஜ் (1929) போன்ற இயக்கங்கள் மூலம் இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்தில் INC முக்கியப் பங்கு வகித்தது.
- சுதந்திரத்திற்குப் பிறகு, இந்தியாவில் மதச்சார்பின்மை, பாராளுமன்ற ஜனநாயகம், திட்டமிட்டப் பொருளாதாரம் மற்றும் அணிசேரா கொள்கைக்கு INC பங்களித்தது.
- இந்திய அரசியலமைப்பை உருவாக்கவும் ஜனநாயக நிறுவனங்களை நிறுவவும் இந்தக் கட்சி உதவியது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★